முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2020 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2020-01-18
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது (OTQs தவிர்ந்த). பரீட்சார்த்திகள் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

எட்டு (08) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.4*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியினால்** 2016 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமானது 2019 செப்ரெம்பர் 30 இல் ரூபா 1,400,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூபா 3,200,000/- ஆகும். கம்பனியானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20 % பெறுமானத் தேய்விடுகிறது எனின், மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபமாக அமைவது:

(1) ரூபா 120,000/-. (2) ரூபா 440,000/-. (3) ரூபா 200,000/-. (4) ரூபா 760,000/-.
(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றுள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) வாகனத் தயாரிப்புக் கம்பனியொன்றில் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு வாகனம்

(2) தளபாடக் கடையொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள தளபாடம்

(3) அலுவலகப் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ள கணினிகள்

(4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வருவனவற்றுள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்று தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவு செய்க:

(1) உயர்ந்தபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை ஐம்பது (50) ஆகும்.

(2) குறைந்தபட்ச பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஒன்று (01) ஆகும்.

(3) பொது மக்களுக்கு பங்குகளை வழங்க முடியும்.

(4) வருடாந்த அறிக்கை வழங்குவது கட்டாயமல்ல. (02 புள்ளிகள்)

**1.4** கீழ்வரும் கூற்றுக்கள் தொக்குகளுடன் தொடர்புபட்டவை:

**(a)** முதல் வந்தது முதல் சென்றது (FIFO) முறையின் அடிப்படையில் முதலில் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகள் முதலில் விற்பனை செய்யப்படுகின்றன.

**(b)** தொக்குகள் கிரயத்தில் மட்டுமே அளவிடப்பட வேண்டும்.

**(c)** அலுவலகப் பாவனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களும் தொக்குகளிற்குள் உள்ளடக்கப்படும்.

மேற்கூறியவற்றுள் LKAS – 02 தொக்குகளின் அடிப்படையில் சரியான கூற்று / கூற்றுக்களாக அமைவன:

(1) **(a)** மாத்திரம் (2) **(c)** மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (02 புள்ளிகள்)

***1.5* தொடக்கம் *1.8* வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.**

**1.5** **அனி, பெனி** மற்றும் **கனி** ஆகியோர் இலாப – நட்டங்களை முறையே 3:2:1 என்ற விகிதத்தில் பங்கிடுகின்ற பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் ஆவர். **பெனி** பங்குடமையிலிருந்து இளைப்பாறத் தீர்மானித்துள்ளதுடன் **அனி** மற்றும் **கனி** ஆகியோர் இலாப – நட்டங்களை முறையே 5:3 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொண்டு பங்குடமையைத் தொடர்ந்து நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

புதிய பங்குடமையில் **அனி** மற்றும் **கனி** ஆகியோரின் ஆதாயம் பெறும் விகிதத்தை (gaining ratio) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.6** 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் ஏற்பாடுகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.7** நிதிக் கூற்றுக்களின் கூறுகள் (components) மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **சமனல விளையாட்டுக் கழகத்தின்** ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| | |
|---|---|
| 2019 சனவரி 01 இலான அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 123 |
| 2019 ஆம் ஆண்டில் இணைந்த புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 34 |
| 2019 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்துவக் கட்டணம் | ரூபா 504,000/- |
| அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் | ரூபா 3,000/- |

2019 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்துவக் கட்டணங்களின் விபரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்குரியது | 9 அங்கத்தவர்கள் |
| 2019 ஆம் ஆண்டிற்குரியது | 151 அங்கத்தவர்கள் |
| 2020 ஆம் ஆண்டிற்குரியது | 8 அங்கத்தவர்கள் |

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில், 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டிய அங்கத்துவக் கட்டணத்தைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட டயானா தனியார் கம்பனியின்** 2019 டிசெம்பர் 31 இலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான வங்கி மீதியானது ரூபா 625,250/- வரவு மீதியினைக் காட்டியது. ஆயினும் வங்கிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 169,750/- ஆக இருந்தது. பின்னர் வேறுபாட்டிற்கான காரணங்களாக பின்வருபவை கண்டறியப்பட்டன:

(1) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 72,500/- பெறுமதியான காசோலையானது கொடுப்பனவிற்காக வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(2) வாடிக்கையாளர் ஒருவர் வங்கியில் நேரடியாக வைப்புச் செய்துள்ள ரூபா 110,200/- ஆனது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.

(3) மாதாந்தக் கடன் தவணைக் கட்டணமான ரூபா 550,000/- இனை மேற்கொள்ள வங்கிக்கு வழங்கப்பட்ட நிலையியற் கட்டளையொன்று காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை.

(4) 2019 டிசெம்பர் 31 இலான தேறாத காசோலை வைப்புகள் ரூபா 85,000/- ஆக இருந்தது.

(5) மாதத்திற்கான வங்கி அறவீடான ரூபா 3,200/- ஆனது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2019 டிசெம்பர் மாதத்திற்கான கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) (03 புள்ளிகள்)

(b) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

(a) **வரையறுக்கப்பட்ட HC (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டன**:**

**வரையறுக்கப்பட்ட HC (தனியார்) கம்பனியின்** 2019 டிசெம்பர் 01 இலான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 297,750/- ஆக இருந்ததுடன் 2019 டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஊடுசெயல்கள் கீழே தரப்படுகின்றன:

| | ரூபா |
|---|---:|
| கடன் விற்பனை | 204,300 |
| உட்திரும்பல்கள் | 27,675 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற பணம் | 117,450 |
| அனுமதிக்கப்பட்ட கழிவுகள் | 7,500 |
| அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு | 1,290 |

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, 2019 டிசெம்பர் மாதத்திற்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட HC (தனியார்) கம்பனியின்** 2019 டிசெம்பர் 31 இலான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது கடன்பட்டோர் பேரேட்டுத் தனித்தனிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. 2019 டிசெம்பர் 31 இலான கடன்பட்டோர் பேரேட்டுத் தனித்தனிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 340,410/- ஆக இருந்தது.

பின்னரான சரிபார்த்தலில் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன:

(1) 2019 டிசெம்பர் மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பேட்டின் (விற்பனை நாளேட்டின்) கூட்டுத்தொகை ரூபா 17,025/- இனால் அதிகமாகக் கூட்டப்பட்டிருந்தது.

(2) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்தான காசுப் பெறுவனவு ரூபா 9,300/- கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட பேரேட்டுத் தனித்தனிக் கணக்கில் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(3) ரூபா 22,500/- பெறுமதியான கடன் விற்பனைப் பட்டியலொன்று (credit sales invoice) தவறுதலாக கொள்வனவு நாட்குறிப்பேட்டில் (கொள்வனவு நாளேட்டில்) பதியப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 டிசெம்பர் மாதத்திற்கான திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக**.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**டேனி, பேர்னி** மற்றும் **மியேலி** ஆகியோர் இலாப – நட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிரும் **DBM பங்காளர்கள்** என்ற பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்கள் ஆவர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்துள்ளது:

- பங்காளர்களின் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டிற்கு 12 % மூலதனம் மீதான வட்டி செலுத்தப்படுகிறது.
- **பேர்னி** ஆண்டிற்கு ரூபா 1,800,000/- சம்பளம் பெறுவதற்கு உரித்தினைக் கொண்டுள்ளார்.

(2) 2019 மார்ச் 31 இலான பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூபா'000)** | **செலவு (ரூபா'000)** |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **டேனி** | | 12,000 |
| **பேர்னி** | | 9,000 |
| **மியேலி** | | 6,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **டேனி** | | 3,000 |
| **பேர்னி** | 1,200 | |
| எடுப்பனவுகள்: | | |
| **டேனி** | 1,500 | |
| **பேர்னி** | 750 | |
| **மியேலி** | 1,500 | |

(3) பங்குடமையின் 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 8,775,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட மகீ தனியார் கம்பனியின்** 2019 டிசெம்பர் மாதத்திற்கான சம்பளப் பதிவேடுகளில் இருந்து பிரித்தறியப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு:

| அடிப்படைச் சம்பளம் (ரூபா) | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு (ரூபா) | EPF கழிப்பனவு (8 %) (ரூபா) | நிகரச் சம்பளம் (ரூபா) |
|---:|---:|---:|---:|
| 10,875,000 | 13,650,000 | 870,000 | 23,655,000 |

ஊழியர் சேம நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றுக்கான தொழில்தருநரின் பங்களிப்புகள் முறையே அடிப்படைச் சம்பளத்தில் 12 % மற்றும் 3 % ஆகும்.

மாதச் சம்பளங்கள் குறிப்பிட்ட மாதத்தின் இறுதி வேலை நாளன்று செலுத்தப்படுவதுடன் EPF மற்றும் ETF ஆனவை அடுத்த மாதம் 10 ஆம் திகதியன்று செலுத்தப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**வரையறுக்கப்பட்ட மகீ தனியார் கம்பனியின்** 2019 டிசெம்பர் மாதத்திற்கான கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளைத் **தயாரிக்குக**:

(a) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) EPF கொடுப்பனவுக் கணக்கு (EPF payable account) (02 புள்ளிகள்)

(c) ETF கொடுப்பனவுக் கணக்கு (ETF payable account) (01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியான **வரையறுக்கப்பட்ட வட் மோர் (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து 2019 டிசெம்பர் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டுள்ளன:

| | ரூபா |
|---|---:|
| விற்பனை (VAT நீங்கலாக) | 11,250,600 |
| மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட VAT பரிப்புடைய உள்நாட்டுக் கொள்வனவுகள் (VAT உள்ளடங்கலாக) | 5,949,985 |
| மாதத்தில் பெறப்பட்ட VAT பரிப்புடைய சேவைகள் (VAT உள்ளடங்கலாக) | 1,312,035 |
| 2019 டிசெம்பர் 01 இலான VAT கட்டுப்பாட்டு கணக்கின் செலவு மீதி | 225,700 |

பொருத்தமான VAT வீதம் 15 % ஆகும்.

சகல கொள்வனவுகளும் சேவைகளும் அவற்றுக்கு உரிய வரிப் பட்டியலுடன் (Tax Invoices) ஆதாரப்படுத்தப்பட்டுள்ளன எனக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 டிசெம்பர் மாதத்திற்கான VAT கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 07

**ஸ்டார் நடனக் கழகமானது** பொதுமக்களுக்கான நாடக நிகழ்ச்சிகளை நடத்துவதுடன் அங்கத்தவர்களின் பயன்பாட்டிற்காக உணவகமொன்றையும் நடத்துகிறது.

**ஸ்டார் நடனக் கழகத்தின்** ஏடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டுள்ளன:

(1) 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஸ்டார் நடனக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தல் கணக்கு கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| **கொள்ளல், கொடுத்தல் கணக்கு** | | | |
|---|---|---|---|
| 2019 சனவரி 01 இல் மீதி | 11,250 | செயலகச் செலவுகள் | 900 |
| நன்கொடைகள் | 12,450 | கட்டட வாடகை | 5,400 |
| நுழைவுச்சீட்டு விற்பனை | 32,250 | உணவுச்சாலை வழங்குநர்களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 27,300 |
| அங்கத்தவர் சந்தா | 8,100 | உணவுச்சாலைச் செலவுகள் | 4,800 |
| உணவுச்சாலை விற்பனைகள் | 42,450 | வருகைதரு கலைஞர்களுக்கான கட்டணம் | 1,500 |
| | | அச்சிடல் மற்றும் காகிதாதிச் செலவுகள் | 2,250 |
| | | அரங்க உபகரணம் (2019 டிசெம்பர் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 22,500 |
| | | நாடகத் தயாரிப்புச் செலவுகள் | 27,000 |
| | | நாடகம் தொடர்பான ஏனைய செலவுகள் | 6,150 |
| | | 2019 டிசெம்பர் 31 இல் மீதி | 8,700 |
| | **106,500** | | **106,500** |

(2) 2019 சனவரி 01 மற்றும் 2019 டிசெம்பர் 31 இலான ஏனைய சொத்துக்கள் மற்றும் ஏனைய பரிப்புக்கள் கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| **திகதியில்** | **2019 சனவரி 01** | **2019 டிசெம்பர் 31** |
|---|---|---|
| உணவுச்சாலை வழங்குநர்களுக்கான சென்மதிகள் | 1,800 | 2,100 |
| முற்பணமாகப் பெறப்பட்ட அங்கத்தவர் சந்தா | 300 | 75 |
| நிலுவையிலுள்ள அங்கத்தவர் சந்தா | 750 | 450 |
| அரங்க உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 67,500 | 81,000 |
| உணவுச்சாலை தொக்குகள் - கிரயத்தில் | 4,200 | 3,300 |

(3) நன்கொடைகள் காலப்பகுதிக்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(4) ஆண்டின்போது எவ்வித அரங்க உபகரணங்களும் விற்பனை செய்யப்படவில்லை.

(5) கட்டட வாடகையில் ½ பங்கானது உணவுச்சாலை வளாகத்திற்கு உரியதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **ஸ்டார் நடனக் கழகத்தின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) உணவுச்சாலை வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) வருமான மற்றும் செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**சதுனி, கசுனி** மற்றும் **நதுனி** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2:2:1 எனும் விகிதத்தில் பகிரும் **மூன் டிரேடிங்** பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்கள் ஆவர்.

கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வரும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது:

- பங்காளர்கள் அவர்களின் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 12 % வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
- **கசுனி** ரூபா 60,000/- மாதச் சம்பளத்தைப் பெற உரித்துடையவர்.

(2) 2019 டிசெம்பர் 31 இல் **மூன் டிரேடிங்** இன் பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூபா ’000)** | **செலவு (ரூபா ’000)** |
|---|---|---|
| 2019 சனவரி 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **சதுனி** | | 7,500 |
| **கசுனி** | | 9,000 |
| **நதுனி** | | 12,000 |
| 2019 சனவரி 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **சதுனி** | | 3,000 |
| **கசுனி** | 1,200 | |
| **நதுனி** | | 1,500 |

(3) 2019 டிசெம்பர் 31 இல், **நதுனி** தனது தனிப்பட்ட காரணங்களிற்காக பங்குடமையிலிருந்து இளைப்பாறுவதற்குத் தீர்மானித்தார். **நதுனியின்** இளைப்பாறலின் பின் இலாப, நட்டமானது **சதுனி** மற்றும் **கசுனி** ஆகியோரிடையே முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிரப்படவுள்ளது.

(4) 2019 டிசெம்பர் 31 இல் பங்குடமையின் நன்மதிப்பானது ரூபா 1,500,000/- ஆக மதிப்பிடப் பட்டுள்ளது. நன்மதிப்பானது தனியான நன்மதிப்புக் கணக்கினைப் பேணாது பங்காளர் மூலதனக் கணக்குகளின் ஊடாகச் சீராக்கப்பட வேண்டும்.

(5) 2019 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பிடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் விபரம் கீழ்வருமாறு:

| | **2019 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை (ரூபா ’000)** | **2019 டிசெம்பர் 31 இல் கிரயம் (ரூபா ’000)** | **2019 டிசெம்பர் 31 இல் திரள் தேய்மானம் (ரூபா ’000)** |
|---|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் | 5,400 | 7,500 | 4,200 |
| மோட்டார் வாகனம் | 900 | 2,250 | 750 |

நடைமுறையல்லாச் சொத்துக்கள் பங்குடமையின் ஏடுகளில் மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் முன்கொணரப்படுகின்றன.

(6) **நதுனியின்** இளைப்பாறலின்போது அவருக்குச் செலுத்த வேண்டிய தொகையை ஒரு கடன் கணக்கிற்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(7) 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 4,500,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **மூன் டிரேடிங்** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) பங்காளர் மூலதனக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(b) பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் தனியுரிமையாளர் வியாபாரமான **பவானி டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

(1) சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| | **2018 ஏப்ரல் 01 இல்** | **2019 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| காணியும் கட்டடமும் - முன்கொணரற் பெறுமதியில் | 7,500 | 7,200 |
| மோட்டார் வாகனங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 10,500 | 11,100 |
| தொக்குகள் | 3,750 | 3,600 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 4,200 | 4,050 |
| முன் செலுத்தப்பட்ட காப்புறுதி | 750 | 900 |
| வங்கி மீதி | 1,950 | ? |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 2,400 | 2,025 |
| அட்டுறு மின் கட்டணம் | 330 | 255 |

(2) **பவானி** தமது வியாபாரத்திற்கு முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை என்பதுடன் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையான வங்கிக் கூற்றுக்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| **பெறுவனவுகள்** | **ரூபா** |
|---|---|
| காசு விற்பனைகள் | 5,250,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 3,750,000 |
| **கொடுப்பனவுகள்:** | |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 1,875,000 |
| காசுக் கொள்வனவுகள் | 2,250,000 |
| புதிய மோட்டார் வாகனமொன்றின் கொள்வனவு | 1,500,000 |
| காப்புறுதி | 375,000 |
| மின்சாரம் | 420,000 |
| கூலிகள் | 2,100,000 |
| ஏனைய செலவுகள் | 495,000 |

(3) **பவானி** அனைத்து காசுப் பெறுவனவுகளையும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்திருந்ததுடன் சகல கொடுப்பனவுகளையும் காசோலைகள் ஊடாக மேற்கொண்டிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் **பவானி டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

**வரையறுக்கப்பட்ட அசேனி (தனியார்) கம்பனியின்** 2019 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

*(ரூபா ’000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (2,000,000 சாதாரண பங்குகள்) | | 108,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 25,600 |
| 12% தனிச்சங்கள் | | 40,000 |
| காணி மற்றும் கட்டடங்கள் - கிரயத்தில் (காணி - ரூபா 20 மில்லியன்) | 100,000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 75,000 | |
| 2018 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| கட்டடங்கள் | | 32,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 30,000 |
| 2019 மார்ச் 31 இல் தொக்குகள் - கிரயத்தில் | 184,900 | |
| வியாபார வருமதிகள் | 74,300 | |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 14,730 | |
| வியாபார சென்மதிகள் | | 162,300 |
| 2018 ஏப்ரல் 01 இல் ஐயக்கடன் ஏற்பாடு | | 1,800 |
| விற்பனை | | 839,780 |
| விற்பனைக் கிரயம் | 641,350 | |
| விநியோகச் செலவுகள் | 43,600 | |
| மின்சாரம் மற்றும் நீர் | 12,200 | |
| பணிப்பாளர் கட்டணங்கள் | 12,000 | |
| பணித்தொகுதியினரின் சம்பளங்கள் | 35,800 | |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 3,700 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 2,800 | |
| வாகனப் பராமரிப்புச் செலவினங்கள் | 3,300 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,100 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 8,200 | |
| சாதாரண பங்குகளிற்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் | 18,500 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 2,400 | |
| வருமான வரி ஏற்பாடு – 2018 ஏப்ரல் 01 இல் | | 12,700 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 18,300 | |
| **மொத்தம்** | **1,252,180** | **1,252,180** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இலான தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூபா 184,200,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) கம்பனிக்கு ரூபா 2,300,000/- செலுத்த வேண்டியிருந்த ஒரு வாடிக்கையாளர் 2019 யூலை 20 இல் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வருமதியாகவுள்ள தொகை அறவிட முடியாததாக மாறியுள்ளது. மேலும் வியாபார வருமதிகள் மீதியில் 5 % ஐ ஐயக்கடன் ஏற்பாடாகப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(3) 2019 மார்ச் 31 இல் கீழ்வரும் அட்டுறுக்கள் மற்றும் முற்கொடுப்பனவுச் செலவினங்கள் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்:

| | | |
|---|---|---|
| முற்பணமாகச் செலுத்தப்பட்ட வாகனப் பராமரிப்புச் செலவினம் | : | ரூபா 200,000/- |
| அட்டுறு மின்சாரம் | : | ரூபா 100,000/- |

(4) கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுவதுடன் சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 10 ஆண்டுகள் |

(5) வரிமதிப்பாண்டு 2017/18 க்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 13,300,000/- என்பதுடன் முழுத் தொகையும் அந்த ஆண்டிலேயே செலுத்தப்பட்டது. வரிமதிப்பாண்டு 2018/19 க்கு மதிப்பிடப்பட்ட மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 11,500,000/- ஆகும்.

(6) 2018 ஏப்ரல் 01 இல் ஒவ்வொன்றும் ரூபா 1000/- ஆன 40,000 எண்ணிக்கையான 12% தனிச்சங்கள் வழங்கப்பட்டதுடன் வட்டியானது அரையாண்டிற்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும்.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2019 யூலை 31 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**வரையறுக்கப்பட்ட அசேனி (தனி) கம்பனியின்** முகாமையின் பாவனைக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (13 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 ஆந் திகதியிலான நிதிநிலைக் கூற்று (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01<br>கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02<br>பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03<br>பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |